ISSN:2582-9599



# கலை பற்றிய ஒழுக்கக் கொள்கையும் தேவதாசிகளின் வாழ்க்கை முறையும் ஈழத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**கிருபாசக்தி கருணா[1]**

**இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

kirupasakthy@univ.jfn.ac.lk

**முனைவர்.N.சாரதா[2]**

**தலைவர்,இசைத்துறை, (Bridge Academy) சென்னை.**

66

**ஆய்வுச்சுருக்கம்**

சமகால மெய்யியலின் கிளைகளுள் ஒன்றான “அழகியல் மெய்யியல்” அழகியலின் இயல்பு சார்ந்து முக்கியம் பெறுகின்றது. அழகியலின் கூறுகளான சங்கீதம், நடனம் போன்ற நுண்கலைகள்மேல் மனிதர்களுக்கு ஏற்படுகின்ற ஆர்வம், இரசனை என்பன மனித மனங்களை நல்வழிப்படுத்தவும் மேல்நிலைப்படுத்தவும் உதவும் என்பது மெய்யியல், அழகியல், உளவியல் அறிஞர்களின் ஒருமித்த கருத்தாகும். சமகால இந்திய மெய்யியல், “இந்தியத்துவம்” என்பதன் அடிப்படையில் இருந்து எழுச்சி பெற வேண்டும் என்கிற கருத்து வலிமை பெற்றுள்ளது. இந்தியத்துவம் எனக் கருதப்படுவது ஆன்மீகம் சார்ந்த அல்லது ஆன்மீகத் தன்மையானது என்பதையே குறிக்கின்றது. ஆன்மீகம் சார்ந்த சமயமும் மெய்யியலும் ஒன்றுக்குள் ஒன்று ஊடுருவியதாகவே காணப்படுகிறது. உண்மையான கலை மனிதனின் ஒழுக்க நெறியை உயர்த்தும் என்றும், அந்த மனிதன் சார்ந்த சமூகத்தை அறவழிக்கு இட்டுச் செல்லும் என்றும் மெய்யியல் கூறுகின்றது. இதனாலேயே கலைபற்றிய ஒழுக்கக் கொள்கையினரான பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்றோர் கலைப் படைப்புக்களின் ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். அழகியல் மரபிலே தேவதாசிகள் அல்லது தேவரடியார் முக்கியமான ஓர் இடத்தை வகுத்து வந்துள்ளனர். இந்திய அழகியலின் பல்வேறு அம்சங்களைப் பிரதிபலிப்பவர்களாகவும் இவர்கள் விளங்கினர். இறைவனுக்குக் கலை, சமய, ஆன்மீக ரீதியான தொண்டுகளை அர்ப்பணமாகச் செய்தவர்களை இப்பதங்கள் சிறப்பாகக் குறிக்கின்றன. ஈழத்திலும் தமிழகத்திலிருந்து கோயில் பணிகளுக்காகத் தேவதாசிகள் அழைக்கப்பட்டார்கள். இலக்கியம், தொல்லியல் முதலிய வரலாற்று ஆதாரங்கள் தரும் சான்றுகள் உண்மையான தேவதாசிகள் நல்லொழுக்கம் உள்ளவர்களாகவும், சிறந்த சமயத் தொண்டு செய்து வந்தவர்களாகவும், பக்தர்களாகவும் நுண்கலைஞர்களாகவும் காட்டுகின்றன. இறைவனுக்கு தம்மை அர்ப்பணித்து இசை, நடன சேவை செய்து வந்த பெண் கலைஞர்களான தேவதாசிகளையும் அவர்களுடைய கலைத்துவத்தையும் பிற்காலத்தைய சமூகம் ஏற்க மறுத்தது. இப் பின்னடைவுக்கு இவர்களின் ஒழுக்க கொள்கையில் ஏற்பட்ட மாற்றமே காரணமாகும் என்ற கருதுகோளின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவர்களுடைய இம்மாற்றத்துக்கு உந்துதலாக இருந்திருக்கக் கூடிய காரணங்களும் உசாவப்படுகின்றது. நூல் வெளியீடுகளை அடிப்படையாகக் கொண்டு விவரண ஆய்வாக இவ் ஆய்வு

மேற்கொள்ளப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்-** கலை, ஒழுக்கம், தேவதாசி, அழகியல்

**ஆய்வு அறிமுகம்**

இந்திய மெய்யியலை ஆய்வு செய்த இராதாகிருஷ்ணன் இந்தியத்துவம் என்பது அழிவற்ற தத்துவங்களைக் குறிக்கின்றது என்றும், ஆன்மீகமயமான சுவாசத்தினைக் குறிக்கின்றது என்றும், எல்லாவற்றினையும் "ஏகான்மா" ஒன்றிலே காணுகின்ற தன்மையைக் குறிக்கின்றதென்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே ஆன்மீக நோக்கோடு தான் இந்திய மெய்யியல் குறித்துக் கட்டாயமாக அணுகப்பட வேண்டும் என்கிற கட்டுப்பாடு இன்று இந்திய மெய்யியலில் காணப்படுகின்றது.[1] அழகியல் என்பது அழகின் இயல்பு, அழகின் பெறுமானம் பற்றிச் சிந்திக்கின்ற மெய்யியலில் ஒரு பிரிவாகின்றது. கலை பற்றிய மெய்யியல் ஆய்வுகளுக்கு நீண்ட கால வரலாறுகள் இருப்பினும் 19ஆம் நூற்றாண்டளவில்தான் அழகியலைக் குறிக்கும் "ஏஸ்தெற்றிக்ஸ்" (Aesthetics) எனும் சொல்லானது முதன் முதலாக அலெக்ஸாண்டர் பாம்கார்டன் (1714- 1762) எனும் ஜேர்மன் மெய்யியலாளரால் ஒரு குறிப்பிட்ட துறையைக் குறிக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டது.[2] இந்த அழகியல் என்ற பதம் கலையம்சம், கலைத்துவம் என்ற சொற்களை ஒத்தனை.

**கலை**

மனிதனால் படைக்கப்படும் படைப்புக்கள் அனைத்தும் கலை என்ற வட்டத்திற்குள் அடங்குகின்றது. இவற்றுள்ளும் அழகை வெளிப்படுத்தும் கலைகள் நுண்கலைகள் எனப்படுகின்றன. நுண்கலைகள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பண்பாட்டை வெளிப்படுத்துவன என்பதன் அடிப்படையில் முக்கியம் பெறுகின்றன. இதனாலேயே "கலை என்பது மக்களது வாழ்வியலை, பண்பாட்டை, நாகரிகத்தை எடுத்துக் காட்டும் கண்ணாடி"[3] எனக் கூறப்பட்டுள்ளது. இதையே ரவீந்திரநாத் தாகூர் "இந்தியக் கலை அளிக்கும் அழகு வெறும் செயற்கை அல்லது இயற்கை அழகன்று. இக்கலை மனித இனத்தின் வழிமுறை அனுபவத்தோடு காட்டுவதோடு வாழ்வின் நோக்கத்தையும் நிறைவேற்றுகிறது என்பர்.[4]

**கலைஞன்-சுவைஞன்**

கலைகளைப் படைப்பவன் கலைஞன் எனப்படுவதும், சுவைப்பவன் (இரசிப்பவன்) சுவைஞன் (இரசிகன்) எனப்படுவதும் கலை அனுபவங்களால் அறியப்படும் சொற்கள் ஆகும். இசை, நடனம் போன்ற நுண்கலைகள் ஊடான கலைப்படைப்புகள் சுவைஞனுக்கு அதி உன்னத அழகியல் திருப்தியைக் கொடுப்பனவாக உள்ளதால்தான் மனித நாகரிகத்தில் இவை முக்கியம் பெறுகின்றன.

**ஒழுக்கக் கொள்கை**

கலை பற்றிய ஒழுக்க கொள்கையினரான பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்றோர் ஒழுக்கத்தைப் பேணும் வகையிலே கலைப்படைப்புக்கள் அமைய வேண்டும் என்றனர். உண்மையான கலை மனிதனின் ஒழுக்க நெறியை உயர்த்துவதாயும் மனிதர்களிடையே இணைப்புக்களை ஏற்படுத்துவதாயும் வாழ்க்கையை "இசைபட வாழ்தல்" என்கிற நிலைக்கு உயர்த்துவதாயும் அமையும். இந்நிலைக்கு கலை உயரும் போதுதான் அழகுத்துவம், கலைத்துவம் முழுமையடையும். கலைப் பொருளில் கண்டு போற்றப்படும் அழகு எதுவாக இருக்க வேண்டுமெனில் அது நிச்சயமாக

ஒழுக்க மேம்பாட்டை அறிவிக்கும் ஒன்றாகவே இருக்க வேண்டும் என்பர். பிளேட்டோவும் அரிஸ்டோட்டிலும் அழகினைத் தூய்மையான அல்லது நேர்மையான இருப்பினை உடையது ஒன்று என்றும், அழகு நல்லதுடன் நெருங்கிய தொடர்புடையது என்றும் கூறப்பட்டுள்ளதும் அறியத்தக்கது. இவ்வாறே கலைக்கு ஒரு சமூக செய்தி உள்ளது என்றும், அது சமூகத்தை அறவழிக்கு இட்டுச் செல்வதாகும் என்றும், கலையின் நோக்கம் மனிதனை அகரீதியாக மாற்றுவதுதான் என்றும், ஒழுக்கவழியில் நின்று ஆனந்தகுமாரசுவாமி கூறும் கருத்தும் மனம் கொள்ளத்தக்கது.[5]

**தேவதாசிகள்**

ஆடலிலும் பாடலிலும் இசைக்கருவிகளை இசைப்பதிலும் சிறந்த தேர்ச்சி பெற்ற தேவதாசிகள் இறைவன் திருமுன் நிலையில் அவற்றை நிகழ்த்துவதற்குத் தகுதி வாய்ந்தவர்கள். ஆகமங்கள் கூறும் கிரியை முறைகளே தேவதாசிகளின் தோன்றலுக்கு வழி சமைத்தன. சிறந்த இசை ஞானம் படைத்த தேவதாசிகள் ஈழத்துக் கோயில்களிலும் கலைச் சேவை புரிந்துள்ளார்கள். இதற்கு ஆலய நித்தியக் கிரியைகளின் ஓர் அங்கமான நிருத்தியம் துணைபுரிந்துள்ளது.

> "தௌர்யத்திரிகம் என்பது நிருத்தியம், கீதம், வாத்தியம் என்னும் மூன்றினையும் தொகுத்துச் சுட்டும். இம்மூன்றாலும் இறைவனை வழிபட வகுக்கப்பட்ட முறை, இந்நுண்கலைகளைப் பேணத் திருக்கோவில் வழிபாடு வழிகோலியதைக் காட்டுகின்றது. இவற்றுள் வாத்தியங்கள் அபிஷேகத்தின் பொழுதும், ஆராதனையின் பொழுதும் மீட்டப்பட வேண்டியன. சாம கானத்தில் ஸ்தோபங்கள் அமைத்துக் கானம் இசைக்கும் பொழுதும், தேவாரங்களைப் பண்ணோடு இசைக்கும் வேளையும், ஏனைய திருமுறைபாக்களை உரிய இராகங்களில் பாடுங் காலத்திலும் கீதத்தால் இறைவனின் நாதோபாசனை நிகழும். கீதம், வாத்தியம் என்னும் இரண்டின் பின் இடம்பெற வேண்டியது நிருத்தமாகும்."[6]

ஆலயக்கிரியைகளில் நடைபெறுவதற்குரிய நித்தியக் கிரியைகள் பற்றிக் காமிகம், காரணம் ஆகிய ஆகமங்கள் விளக்கிக் கூறியுள்ளன. எடுத்துக் காட்டாக,"காமிகாகமத்தில் மூன்று காலப் பூஜையின் போது இரு காலத்தில் முப்பத்தி நான்கு வாத்தியங்கள் முழங்க ஐம்பத்தேழு கணிகையர்கள் நிருத்தம் செய்ய வேண்டும்"[7] எனக் கூறப்பட்டுள்ளது. கணிகையர்கள் என்பது தேவதாசிகள், தேவரடியார்கள் என்போரைக் குறிக்கும் பெயராகும். மேற்கூறிய கிரியை முறைகளே பிற்காலத்தில் தேவதாசி என்ற மரபை உருவாக்கியது. "தேவரடியாள், திருவேலைக்காவல், பணிப் பெண்டிர், பதியிலார், ஆடல் மகளிர் எனும் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன."[8]

**ஈழத்திலே தேவதாசிகளின் ஊடாட்டம்**

1. நல்லூர் கந்தசுவாமி கோயில்-

   "சாயங்காலப் பூசைக்கும் இரண்டாங்காலப் பூசைக்கும் இடையே வசந்த மண்டபத்தின் எதிரே பொதுப் பெண்களின் நடன சங்கீத நிகழ்ச்சிகள் நடந்தன".[9] "திருவிழாக் காலங்களில் தேவதாசிகள் நடனம் ஆடுவது சாதாரணமான நிகழ்ச்சியாக இருந்துள்ளது. அழகிய கோயிற் பெண்கள் ஏராளமான நகைகளால் தங்களை அலங்கரித்துக் கொண்டு, சிற்ப வேலைபாடுகள் நிறைந்த தேரின் முன் நடனம் ஆடினார்கள்." [10]

2. உருத்திர கணிகையர் கதாசாரத்திரட்டு

"19ஆம் நூற்றாண்டு நடுப்பகுதி, பிற்பகுதியிலே தமிழகத்திலுள்ள கண்ணமங்கையை சேர்ந்த மாது ஸ்ரீ கமலாம்பிகை முதலிலே கைதடியைச் சேர்ந்த திருவேலப்ப முதலியாரின் வேண்டுகோளுக்கு இணங்கி அங்குள்ள பிள்ளையார் ஆலயத்திலே சில காலமாகக் கலைச்சேவை செய்து பிரபல்யம் அடைந்தார்".[11] கைதடி என்பது யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் ஊராகும்.

இந்தக் காலப்பகுதியிலே கமலாம்பிகை கொழும்பிலே நடைபெற்ற திரு. பொன்னம்பல முதலியாரின் திருமண வைபவத்திலே நன்கு ஆடிப் பாராட்டுப் பெற்றுள்ளார். இதன் பின்னர் தன் பிள்ளைகளுடைய இசை நடன கல்வியின் பொருட்டு தமிழகம் சென்று மீண்டும் கைதடி திரும்பினார். அந்த சமயத்திலே கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் மகா கும்பாபிஷேகத்தில் நடனம் ஆடுவதற்கான அழைப்பை ஏற்றுச் சென்ற கமலாம்பிகை, பொன்னம்பல முதலியாரின் வேண்டுகோளுக்கிணங்கி ஆலயக் கணிகையாகப் பணி புரியத் தொடங்கினார். பின்னர் இவரது பிள்ளைகளாகிய சந்தானவல்லி, அஞ்சுகம் ஆகியோரும் கோயில் நர்த்தகிகள் ஆனார்கள். அந்நேரத்தில் அஞ்சுகம் தாயாரின் வேண்டுகோளுக்கமைய தேவதாசிகளின் வரலாறு பற்றி "உருத்திர கணிகையர் கதாசாரத்திரட்டு" எனும் நூலை 1911இல் கொழும்பிலே வெளியிட்டார். "இந்நூலாசிரியர் பரதம் மட்டுமின்றி வீணை, வாய்ப்பாட்டு, தமிழ் முதலியனவற்றைத் தமிழகம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்த கலைஞர்களிடமும் அறிஞர்களிடமும் கற்றவர்".[12] என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய நூலுக்கு வித்துவான் சி.கணேசய்யர், நீர்வேலி ச.சிவப்பிரகாச பண்டிதர் முதலியோர் சிறப்புப் பாயிரங்கள் எழுதிப் பாராட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்நூலாசிரியர் யாழ்ப்பாணத்துடன் வைத்திருந்த நெருங்கிய தொடர்பும் அபிமானமும், மதிப்பும் யாழ்ப்பாணக் கலைஞர்களிடமும் இசையையும் நடனத்தையும் கற்றதிலிருந்து புலனாகின்றது.

3. கனகி புராணம்

19ம் நூற்றாண்டில் வாழ்ந்த நட்டுவச் சுப்பையனார் எனும் புலவர் யாழ்ப்பாணத்திலே வண்ணை வைத்தீசுவரன் கோயிலிலே நர்த்தகியாக விளங்கிய கனகி எனும் தேவதாசி பற்றிக் கனகி புராணம் எனும் நூலைப் பாடியுள்ளார். "புராணம் என்ற இலக்கிய வடிவத்தை வைத்துக் கொண்டு சமுதாயச் செய்திகளை அங்கதமாகப் பாட இரண்டொருவர் வழிவகுத்தனர். அவர்களுள் அவசியம் குறிப்பிடப்பட வேண்டியவர் கனகி புராணம் பாடிய சுப்பையனார்".[13] "இந்நூலின் பெயர் கனகி புராணம், கனகி சயமரம் (சுயம்வரம்) என்னும் பெயரும் அதற்கு உண்டு".[14] அழகு வாய்ந்த கணிகையான கனகியுடன்(தேவதாசி) அக்காலத்து யாழ்ப்பாணப் பிரபுக்கள் பலரும் தொடர்பு கொண்டிருந்தனர். அதனைக் கருவாகக் கொண்டு அங்கதச் சுவை ததும்பும் அற்புதமான செய்யுள்களை சுப்பையனார் தந்துள்ளார்.

4. பொலநறுவைக் கல்வெட்டு

சோழர் காலத்தில் பொலநறுவையில் கட்டப்பட்ட வானவன் மாதேவி ஈஸ்வரத்தில் காணப்படும் அதிராசேந்திரன் காலத்துக் கல்வெட்டு ஒன்று தேவரடியார் பற்றிய செய்தியை குறிப்பிடுகின்றது. சோழமண்டலத்து மங்கலப்பாடி வேளான் கங்கைகொண்ட சோழ பல்லவராயன் என்பவன் நந்தா விளக்கு ஒன்றினை எரிப்பதற்கென்று ஐந்து(5) காசினை வழங்கினார். அதனை ஒப்புக் கொண்டு ஐந்து விளக்கெரிப்பதற்காகக் கோயிலுடன் தொடர்புடைய பல பிரிவினர் பொறுப்பேற்றனர்.[15] இதில் பங்குபற்றிய தேவரடியார்களின் பெயர்கள் இக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இந்நூல்களைப் பற்றி தமிழிலக்கிய முன்னோடிகள் தெரிவித்துள்ள கருத்துக்கள்**

**கனகி புராணம்**

19ஆம் நூற்றாண்டில் தமிழகத்திலும் ஈழத்திலும் சமுதாய உணர்வினைப் பிரதிபலிக்கத் துவங்கிய புலவர்கள், மரபு வழி வந்த வடிவங்களைப் பயன்படுத்தித் தமது செய்திகளை வெளிக் கொணர்ந்தனர். அந்த வகையில் களகி புராணம் புராணங்களில் வேறுபட்ட விதமாகவும் சமுதாயச் செய்தியாகவும் அமைந்திருக்கின்றது.

I. பாவலர் சரித்திர தீபகத்தின் ஆசிரியர் சதாசிவம்பிள்ளை- "கல்வித் திறமையின் துணையாலன்றிக் கவித்துவ சக்தியின் ஆற்றல் கொண்டும் கவிப் பொருளை உள்ளும் புறமும் அறிந்த பட்டறிவின் துணை கொண்டும் புதுமுறைப் புராணம் ஒன்றைப் பாடினார்."[16]

II. பேராசிரியர்.க.கைலாசபதி- "அக்காலப் பிரபுக்களின் சீரழிந்த ஒழுக்க நெறியினையும் பொதுவான தார்மீக வீழ்ச்சியையும் நுண்ணிய அநுபவ உணர்வுடன் கனகி புராணம் சித்தரிக்கிறது."[17]

III. ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு ஆசிரியர் நடராசா,F.X.C- "ஈழத்து இலக்கியத்தின் சிறப்பை எடுத்துரைக்க உரைகல்லாக அமையக்கூடிய இவ்வரிய செல்வம் சிதைந்த வடிவிலேயே காணப்படுகிறது. சிதைந்த நிலையிலும் அதன் மாண்பு அறிஞராற் போற்றப்படத்தக்கது."[18]

IV. பேராசிரியர்.வி.சிவசாமி- "ஆறுமுககநாவலர் போன்றோர் நேரடியாகவே, ஒழுக்கமற்ற தேவதாசிகளைக் கண்டிக்க ஏறக்குறைய அதே காலத்திய சுப்பையனார் எள்ளி நகையாடி இலக்கிய மூலம் கண்டித்துள்ளார்".[19]

**உருத்திர கணிகையர் பற்றி**

I. நூலாசிரியர் அஞ்சுகம்- "இந்நூலின் வழி நூலாசிரியர் கணிகையர்கள் சிவ தொண்டைச் சிறப்பாகச் செய்து நற்பேற்றை அடைய வேண்டும் என்பதற்காக தாஸிதருமத்தில் தலைசிறந்து விளங்கி இறைவனின் அருட்பேறு பெற்ற பலரது வரலாறுகளையே தேர்ந்து எழுதியுள்ளார். மாறாக நடப்பவர்கள் நிந்தைக்கும் வீழ்ச்சிக்கும் உள்ளாவர் என்பதை விளக்க அவ்வாறு அவலப்பட்ட மதனசுந்தரி முதலானவர்களது வரலாற்றையும் இடையிடையே புகுத்தி உள்ளார். மேலாகக்

கணிகையர் வரலாற்று முடிவுகளிலே சகோதரிகளே எனக் கணிகையரை விளித்து உபதேசம் செய்வதையும் அவதானிக்கலாம்".[20]

II. "தாயார் கமலாம்பிகை சிவத்தொண்டிலிருந்து இளைப்பாறிய போது ஸ்ரீ பொன்னம்பல முதலியார் மகன் குமாரசாமி முதலியார் தர்மகர்த்தாவாக இருந்தார். அவர் கமலாம்பிகைக்கு மாதந்தோறும் சம்பளமும் வருடம் தோறும் ஒரு சேலையும் உபகாரமாக கொடுத்து வந்துள்ளார். கமலாம்பிகை தனது 73 வது வயதில் இறந்த போது பொன்னம்பலவாணேசர் கோயிலில் இருந்து தீர்த்தமும், இரட்டைப் பரிவட்டமும், திருமாலையும், சந்தனக் காஸ்டமும் இருபத்தைந்து ரூபாவும் அனுப்பி வைக்கப்பட்டன. இது அவர்கள் கோயிலில் ஆற்றிய தொண்டின் கௌரவமாக அமைகின்றது".[21]

**முடிவுரை**

ஆரம்ப காலத்தில் கோவில் தேவதாசிகளாகப் பணியாற்றியவர்களுக்கு சமூகத்தில் மிகுந்த மரியாதையும் மதிப்பும் இருந்திருக்கின்றது. கலைத்துவம் மிக்க நடன நர்த்தகிகளாகவும் தேவரடியார்களாகவும் வாழ்ந்த தேவதாசிகள் காலப்போக்கில் எதிர்நோக்கிய சவால்கள் வேதனை தருவன. கோயிலும் கலையும் சமூகம் சார்ந்ததாக இருந்த போது தேவதாசிகளுடைய கலைத்துவத்தின் மூலம் பெறப்பட்ட ரசனை மிகத் திருப்திகரமாக இருந்திருக்கின்றது. ஆனால் அவர்களுடைய நடத்தைக் கோலத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்குரிய காரணிகளும் பரிகாரங்களும் அக்காலத்திலேயே ஆராயப்பட்டிருக்க வேண்டும். கோயில்களாலும் நிறுவனங்களாலும் போசிக்க முடியாத சூழலில் இவர்கள் சமஸ்தானங்களையும் பிரபுக்களையும் சமூகத்தில் செல்வந்தராக இருந்த பெரியோர்களையும் நம்பி வாழ வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கலாம். எதுவாக இருந்தாலும் சுவைஞனுடைய உண்மையான கலை அனுபவம் நேர்மையானதாக இருக்கும் போது சமுதாயத்தில் உயர்ந்த மாறுதல் ஏற்படும். அதுவே மனிதத் தன்மையை உயர்நிலைக்கு இட்டுச் செல்வதாக இருக்கும். பிளேட்டோ அரிஸ்டோட்டில் போன்ற மெய்யியலாளர்கள் கூறுவதைப் போல கலைப்படைப்புக்கள் ஒழுக்கம் பேணும் வகையிலே அமைய வேண்டும். அது மட்டுமல்ல, கலைஞரும் சுவைஞரும் இவ் ஒழுக்கத்தை பேணும் வகையிலே அமையும் பட்சத்தில் மாத்திரம் தான் ஒரு கலை நிலைத்து நிற்க முடியும்.

**அடிக்குறிப்புகள்**

சிவானந்தமூர்த்தி,க. அன்ரன்டயஸ்,க.(1998) மெய்யியல் -ஓர் அறிமுகம்-1. புத்தூர், அம்பாள் வெளியீட்டகம். ப.17.

1. ஜமாஹிர்,பீ,எம்.(2010) மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும். கண்டி, நதா வெளியீடு. ப.148.
2. நாராயணசாமி,டி,வி.(1980) கலையும் மொழியும். சென்னை, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்.ப.32.
3. ஜமாஹிர்,பீ,எம்.(2010) மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும். கண்டி, நதா வெளியீடு. ப.157.

4. மேலது,ப.160.
5. கைலாசநாதக்குருக்கள்,கா. (2009) சைவத்திருக் கோவிற் கிரியைநெறி. யாழ்ப்பாணம், கரிகணன் பிறின்டேர்ஸ்.ப.15.
6. பி,சீதாலஷ்மி.(2016) சிவாகமக் கிரியைகளில் நடனக் கலையின் வகிபாகம், அனைத்துலகச் சைவமகாநாடு,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். ப.304.
7. முருகானந்தம்,ச. (2009) தேவரடியார்கள்-அறிமுகம், பண்பாடு, இதழ் 2. கொழும்பு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம். ப.30.
9. குணராசா,க. (1996) ஈழத்தவர் வரலாறு. யரழ்ப்பாணம்,பூபாலசிங்கம் பதிப்பகம்.ப.139.
10. மேலது, ப.139.
11. சிவசாமி,வி. (2013) பரதக்கலை. கொழும்பு, பூபாலசிங்கம் புத்தகசாலை ப.182.
12. மேலது, ப.185.
13. கைலாசபதி,க. (1986) ஈழத்து இலக்கிய முன்னோடிகள், சென்னை, மக்கள் வெளியீடு. ப.35.
14. இராமலிங்கம்,மு. (1961) கனகி புராணம். கொழும்பு,சுதந்திரன் அச்சகம். ப.1.
15. சங்கத்தமிழ், (2012) நூல் அறிமுகம்- உருத்திர கணிகையர், கொழும்பு,தமிழ்ச்சங்கம்.ப.36.
16. கைலாசபதி,க. (1986) ஈழத்து இலக்கிய முன்னோடிகள். சென்னை, மக்கள் வெளியீடு. ப.36.
17. மேலது, ப.37.
18. நடராசா,F,X,C.(1970) ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு. கொழும்பு, அரசு வெளியீடு. ப.147.
19. சிவசாமி,வி. (2013) பரதக்கலை. கொழும்பு,பூபாலசிங்கம் புத்தகசாலை. ப.156.
20. சங்கத்தமிழ், (2012), நூல் அறிமுகம்- உருத்திர கணிகையர், கொழும்பு, தமிழ்ச்சங்கம். ப.35.
21. மேலது,ப.40.